2003 ஏப்ரல் 21]

ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதி ஆண்டிலாவது இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து அமைச்சர் அவர்கள் செய்வதற்கு முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தப் பாலத்தினுடைய அவசியம் கருதி இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

262—

சாலையைச் செப்பனிடுதல்.

•12958—திரு. ப. சிதம்பரம்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியிலிருந்து உக்கரம் வழியாக சத்தியமங்கலம் செல்லும் சாலையைச் செப்பனிட உடனடியாக அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்து ரூ.425 கோடியில் அரசு

நலப்பணித் திட்டங்களை எல்லாம் துவக்கி வைத்து ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்து மாவட்டத்தைச் செழிப்படைய வைத்திருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட புஞ்சை புளியம்பட்டியிலிருந்து, காவிலிபாளையம், உக்கரம் வழியாக சத்தியமங்கலம் செல்லும் சாலை மிகவும் முக்கியமான சாலை. இரு சக்கர வாகனங்கள் மற்றும் பேருந்துகள் மூலம் பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் இந்தச் சாலை வழியாகத்தான் அதிகமாக வந்து போகிறார்கள். இந்தச் சாலை நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் பாதிப்பாக உள்ளது. எனவே இதை மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்தச் சாலையைச் செப்பனிட்டு இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவு செய்து கொடுக்க அரசு முன் வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட இதரச்சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் அரியப்பம்பாளையம்-புளியம்பட்டி சாலை கிலோ மீட்டர் 0/0 முதல் 20/0 ஆகும். இச்சாலை மாநில நெடுஞ்சாலை எண் 15-ல் ஊட்டி, கோத்தகிரி, மேட்டுப்பாளையம், சத்தி, கோபி, ஈரோடு சாலை எண் 209-ல் புளியம்பட்டியில் முடிவடைகிறது. இச்சாலைப் பகுதி கிலோ மீட்டர் 0/0 முதல் 10/0 வரை கீழ்பவானி வாய்க்கால் பாசனப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியின் அடித்தளம் களிமண் பூமியாக உள்ளதால், இச்சாலையின் மேற்பரப்பு மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது. மேலும் இச்சாலையின் கிலோமீட்டர் 4/0 முதல் 8/4 வரையுள்ள சாலை, ஒருவழிப்பாதையாக உள்ளதால் தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் புறவழிச்சாலையாகப் பயன்படுவதாலும், பல்வேறு சிற்றூர்கள் இப்பகுதியில் அமைந்துள்ளதாலும் அதன் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ளது. எனவே இச்சாலையில் கிலோமீட்டர் 4/0 முதல் 10/0 வரை அகலப்படுத்தி வலுப்படுத்தவும், கிலோமீட்டர் 17/0 முதல் 20/0 வரை வலுப்படுத்தவும் தோராயமாக ரூ 100 இலட்சம் தேவைப்படும்.* எனவே இச்சாலைப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப

2003 ஏப்ரல் 21]

மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 263, (குறுக்கீடு) திரு. ப. சிதம்பரம்.*

திரு. ப. சிதம்பரம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, அங்கு எல்.பி.பி. வாய்க்காலினுடைய கழிவுநீர் இருபுறமும் செல்வதால்—அந்தப் பாதை வண்டி வாகனங்கள் செல்வதற்கும் மற்றும் பேருந்துகள் செல்வதற்கும் மிகவும் பழுதடைந்து, மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால்—மாண்புமிகு அம்மா அவர்களினுடைய பொற்கால ஆட்சியில், இந்த ஆண்டிலேயே இதற்குத் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து, ஏதாவதொரு வகையில் எனது தொகுதி மக்களைக் காப்பாற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாலையினுடைய அவசர அவசியத்தைக் கருதி வரும் நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 263, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.*

TRUTH ALONE TRIUMPHS

263—

வாக்குச்சாவடி.

***18866—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், குப்பனத்தம் நல்லூரில் வாக்குச்சாவடி அமைக்கப்படாததால், வாக்களிக்க சிரமமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?